## 1999ஆம் ஆண்டு தொடக்கம் 2002ஆம் ஆண்டு வரை நடாத்தப்பட்ட க.பொ.த. (சா.தர)ப் பரீட்சையின் கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங்களின் சித்தி சம்பந்தமான விபரங்களைத் தெளிவுபடுத்தல்

* கல்வி அமைச்சு செயலாளரினால் வெளியிடப்பட்ட 1999.01.04ஆம் திகதியிடப்பட்ட 99/13 எனும் இலக்கம் கொண்ட சுற்றுநிருபத்திற்கிணங்க க.பொ.த. (சா.தர)ப் பரீட்சையின் கணித பாட சித்தியின்போது (45) கணிதம் I மற்றும் (42) கணிதம் II என்பன ஒரே பாடங்கள் எனவும், விஞ்ஞான பாட சித்தியின்போது (44) விஞ்ஞானம் I மற்றும் (41) விஞ்ஞானம் II என்பன ஒரே பாடங்கள் எனவும் கருதப்பட வேண்டும்.

* ஏதாவதொரு பதவிக்காக ஆட்சேர்ப்புச் செய்யும்போது கணித பாடம் கட்டாயம் சித்தியடைந்திருத்தல் சம்பந்தமாக (45) கணிதம் I அல்லது (42) கணிதம் II சித்தியடைந்திருப்பதும், விஞ்ஞான பாடம் கட்டாயம் சித்தியடைந்திருத்தல் சம்பந்தமாக (44) விஞ்ஞானம் I அல்லது (41) விஞ்ஞானம் II சித்தியடைந்திருப்பதும் போதுமானது.

* கணிதம் I அல்லது கணிதம் II ஆகிய பாடங்களில் ஒரு பாடத்திலாவது திறமைச் சித்தி பெற்றிருந்தால் கணித பாடத்தில் திறமைச் சித்தி பெற்றுள்ளதாகக் கருதப்படலாம்.

* விஞ்ஞானம் I அல்லது விஞ்ஞானம் II ஆகிய பாடங்களில் ஒரு பாடத்திலாவது திறமைச் சித்தி பெற்றிருந்தால் விஞ்ஞான பாடத்தில் திறமைச் சித்தி பெற்றுள்ளதாக கருதப்படலாம்.

**பரீட்சை ஆணையாளர் நாயகம்,**
**தேசிய மதிப்பீட்டிற்கும் பரீட்சித்தலுக்குமான சேவை,**
**இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்.**